# 4 "... ஒருவரைக் கண்டுபிடி"

**இலக்கு**

*இப்பயிற்சி மாணவர்களின் உரையாடல் தகைமைகளையும், கேட்டல் திறன்களையும் எளிமையாகவும் விளையாட்டாகவும் பயிற்சி செய்யத் துணைசெய்கிறது. மேலும் ஒருவர்க்கொருவர் வினாக்களைத் தொடுப்பதாலும் விடைகளை ஊன்றிக் கேட்பதாலும் அவற்றுக்கு ஏற்ற வகையில் விடையளிப்பதாலும் மாணவர்கள் ஒருவரையொருவர் நன்கு அறிந்துகொள்கின்றனர்.*

தரம் 1 - 6 | 10 - 20 மணித்துளிகள்



**கருவிகள்:**
அறிவுறுத்தல்கள் கொண்ட அட்டைகள், பயிற்சியாளரால் முன்னாக்கம் செய்யப்பட்டவை (ஒரு மாணவனுக்கு / மாணவிக்கு 2-3)

உசாத்துணை:
Piel (2002), பக்கம் 103
(நூற்பட்டியல் உசாத்துணை)

**நடைமுறை:**

- அறிவுறுத்தல்கள் கொண்ட 2-3 அட்டைகளை ஆசிரியர் ஒவ்வொரு மாணவனுக்கும் / மாணவிக்கும் கொடுக்கிறார். அட்டைகளில் அமைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள். எடுத்துக்காட்டாக:

"எங்கள் மொழியில் அர்த்தமுள்ள பெயரைக் கொண்டுள்ள ஒருவரைக் கண்டு பிடி."

"எங்கள் நாட்டின் ஒரு பெரிய நகரத்தில் இருந்து வரும் ஒருவரைக் கண்டு பிடி."

"பத்து வயதிற்கு மேற்பட்ட ஒருவரைக் கண்டு பிடி."

"எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் பிறந்தநாள் உள்ள ஒருவரைக் கண்டு பிடி."

"எங்கள் மொழியில் ஒரு குறிப்பான வட்டார வழக்கில் பேசும் ஒருவரைக் கண்டு பிடி."

"தோசையை விட அப்பத்தை விரும்பி உண்ணும் ஒருவரைக் கண்டு பிடி."

"உன்னைப் போல் அதே கண் நிறத்தை உடைய ஒருவரைக் கண்டு பிடி."

- இத்தகவல்களை வைத்து, மாணவர்கள் வகுப்பில் உள்ள மற்றவர்களை கேள்விகள் கேட்டு வர வேண்டும். (எ.கா.: ஆனால் உங்கள் குடும்பம் "எங்களுடைய தாய்நாட்டில் உங்கள் குடும்பம் ஒரு பெரிய நகரத்திலிருந்து வருகிறதா?" என்று வினா அமைக்கப்பட வேண்டும்) ஒரு மாணவன் / மாணவி தன் வகுப்புத் தோழன் / தோழி கேட்கப்பட்ட வினாவுக்கு ஒத்தவராக அமையின் அவன் / ள் அந்த நபரின் பெயரை அவ்வினாவுள்ள அட்டையில் எழுதுவான் / ள். மாற்றுவழி: அதே அட்டையில் பொருத்தமான மாணவன் கையொப்பமிடுவான். அதே அட்டையில் பல மாணவர்கள் கையொப்பமிடக்கூடிய நிலை உண்டு.
- எல்லா அட்டைகளிலும் கையொப்பமிட்ட பின், (அல்லது நேரம் முடிந்தபின் எ.கா. 10 மணித்துளிகள்), ஒவ்வொருவரைப்பற்றி புதிதாக என்ன அறிந்தார்கள் என்பதை ஆசிரியர் வகுப்பில் கலந்துரையாடுவார்.

---

**குறிப்புகள்:**

- ஒவ்வொரு மாணவனும் / மாணவியும் ஒருவரைக் கண்டுபிடிக்கக்கூடிய வகையில் அறிவுறுத்தல்கள் எளிமையாக அமைய வேண்டும்.
- 2-3 வேறுபட்ட நிலைகளில் வேறுபட்ட நிற அட்டைகளில் அறிவுறுத்தல்களை அமைக்கலாம் ( எ.கா.: பச்சை = எளிமை, நீலம் = நடு நிலை, சிவப்பு = உயர் நிலை) மாணவரின் அகவை நிலைக்கேற்ப அல்லது தரத்திற்கேற்ப நிறங்கள் பகிரப்படும்.
- அறிவுறுத்தல்கள் வகுப்பு சார்ந்த மற்றும் மாணவர்களின் பண்பாடு மற்றும் மொழி தொடர்பான வளங்களுக்குப் பொருத்தமானவையாக அமையவேண்டும்.
- மூத்த மாணவர்களாலும் அறிவுறுத்தல்களுடைய இவ்வட்டைகள் ஆக்கப் படலாம்.
- அட்டைகளின் பயன்பாட்டு நிலையை நீடிக்க அவை தடிப்பானவைகளாக (laminate) ஆக்கலாம் அல்லது காட்சிப் பைகளில் காப்புச்செய்யலாம்.